# தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டு முறைகள்

**முனைவர் இரா. பத்மா**
*உதவி பேராசிரியர், தமிழ்த்துறை*
*தேசியக் கல்லூரி, திருச்சி*

**முன்னுரை**

சங்க காலத் தமிழ் மக்கள் தெளிந்த அறிவுடன் கலைத்திறம் வல்ல நல்வாழ்வும், சிறந்த நல்லுணர்வும், திறமான அறிவும், அரிய மரபும் கொண்டிருந்தனர். பகட்டின்மை, பெருந்தன்மையோடு கூடிய வாழ்க்கை, சுயமரியாதை, அழகுணர்ச்சி, மாறாத அறிவு வேட்கை போன்றவை பேரளவில் நிறைந்த பன்முக சிறப்பு வாய்ந்தது அவர் தம் வாழ்க்கை. வாழ்க்கையைத் துன்பம் குறைந்ததாகவும் இன்பம் நிறைந்ததாகவும் எளிமை மிக்க தாயும் ஆக்குவதற்கு மனிதன் இயற்றிக் கொண்ட உயரியக் கொள்கையே பண்பாடு என்பதாகும்.

மனிதன் காலங்காலமாகப் பின்பற்றி வரும் பழக்கவழக்கங்களே நாளடைவில் சிறப்புப் பெற்று பண்பாடுகளாக வளம்பெறுகின்றன. ஒவ்வொரு இடத்திற்கும், மக்களுக்கும் ஏற்பப் பண்பாடுகள் வேறுபாடுகின்றன. பண்பாடு என்றால் "ஓர் இனத்தாரின் கொள்கைகள் கோட்பாடுகள், நோக்கங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள் சமயங்கள், அரசியல் அமைப்புகள், ஆடைஅணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுகள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும் அத்தகைய பண்பாட்டில் தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்ந்து வந்த இலக்கியங்களும், கவின்கலைகளும் நமக்கு இன்று பறைசாற்றுகின்றன.

**பண்பாடு விளக்கம்**

நம் முன்னோர்களின் பொருள், செல்வம் நமக்கு எப்பொழுதும் எல்லா இடங்களிலும் பயன்கொடுக்காது. ஆனால் நம் சான்றோர்கள் நமக்காக விட்டுச் சென்ற நற்சிந்தனைகளும், இலக்கியங்கள் வாயிலாகப் பண்பாடுகளும் எக்காலத்திற்கும் பயன்பெறும். அத்தகைய தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றும் கருவியாக இலக்கியங்கள் உள்ளன.

ஆங்கிலத்தில் Culture எனப்படும் சொல் பண்பாடு என்று குறிப்பிடப்படுகிறது. உழவு எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ, அவ்வாறே மனத்தையும், மக்களையும் பண்படுத்துவதே பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்பைத்தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தி உள்ளார்கள். பண்பாடு பற்றி கலித்தொகையில்

**"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"**

என்றும், திருக்குறளில்

**"பண்புடையார் பட்டுண்டு உலகம்"**

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்பாட்டைப் பின்பற்றி வாழ்பவர்களை ஒழுக்கமுடையவர் என்றும், சான்றோர் என்றும் புகழ்ந்தனர். புலவர்களும் பண்பாட்டை அடிப்படையாகக்கொண்டே இலக்கியங்களை இயற்றியுள்ளனர்.

**பரந்த உலக மனப்பான்மை**

தமிழர்கள் பரந்த மனப்பான்மை கொண்டவர்கள்.

**"யாதும் ஊரே யாவும் கேளிர்"**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளின் வாயிலாகத் தமிழர்களின் உலக மனப்பான்மையை அறியலாம். பண்டையத் தமிழர்கள் மற்ற நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதனைச் சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மேலும். பிற சமயங்களான சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்தவம் போன்றவை தமிழர்களிடையே வரவேற்கப்பட்டு அவற்றில் கூறப்படும் நற்கருத்துக்கள் சமயப் பொதுமைத் தன்மையோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பரந்த மனப்பான்மையோடு தமிழர்களுக்கே உரிய அடையாளமே இன்றும் சிறப்புப் பெறுகின்றது.

“யாதானும் நாடாமல் ஊராமல் …………. என்று கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும் என்பதைத் ‘தமிழ்மறை’ எனப் போற்றப்படும் திருக்குறளும் வலியுறுத்துகிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களுக்கே உரித்தான பண்பு விருந்தோம்பல். ‘விருந்தினரை உபசரித்தல்’ தமிழர்களுக்கே உரியத் தனிச்சிறப்பாக நெடுங்காலமாகப் போற்றப்படுகின்றன.

**“நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**

என்ற புறநானூற்றுப் பாடலில் பிறர்க்கு உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் உயிர் கொடுத்தோராகவே கருதப்படுகின்றனர். தமிழர்கள் விருந்து உபசரித்தலைத் தம் உயிரினும் மேலாகக் கொண்டிருந்ததைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். வீட்டிற்கு வரும் விருந்தினரைக் கணவன், மனைவி இருவரும் உபசரித்து சிறப்புச் செய்வர். விருந்தோம்பல் பண்பு உலக அளவில் வாழும் அனைத்து தமிழர்களிடையே இப்பண்பு சிறந்து விளங்குதலைக் காணலாம்.

**இரப்போர்க்கு ஈதல்**

இல்லையென்று வருபவர்களுக்கு உண்டி, உடை, பொன், பொருள் அளித்து வாழும் பண்பு தமிழர்களின் பண்பாடே ஆகும். திருக்குறளில்,

**ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு (23)**

என்ற ஈகையின் சிறப்பு உணர்த்தப்படுகிறது. அரசர்கள் செல்வம் படைத்தவர்கள் உன்று இல்லாமல் அனைவருக்கும் கொடுத்து உதவும் கொடைத்தன்மையில் சிறந்து விளங்கும் பண்புடையவர்களாக இருந்தனர். இதனை திருஞான சம்பந்தர்,

**இன்மையால் சென்றிரந்தார்க்கு**

**இல்லை என்னாது ஈந்துவக்கும்**

**தன்மையார் ஆக்கூரின்**

**தான் தோன்றி மாடமே (தேவாரம்)**

என்று தமிழர்கள் இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாது வழங்கும் வள்ளல்களாக இருந்ததை எடுத்துரைக்கிறார். இந்நிலை அயலகத் தமிழர்களிடையே இன்றளவும் நிலைத்து நிற்பதைக் காண முடிகிறது. நம் பண்பாட்டின் அடையாளமாக நடைபெறும் விழாக்களில் ஒன்று ஜல்லிக்கட்டு. இவ்விழாவிற்கு தமிழ்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பின் பிரதிபலிப்பு உலகத் தமிழர்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதைக் கண்டுணர முடிந்தது. உலகில் எங்கும் வாழ்ந்தாலும் தமிழன் நான் என்ற அடையாளத் துடிப்பை தான் வாழும் அயல்நாட்டில் மூலை முடுக்குகளில் எல்லாம் இருந்து எதிரொலி கேட்டது. இந்த இன உணர்வு தமிழர்களிடையே இருந்த பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் மீட்டெடுக்க பண்பாட்டின் வெளிப்பாடேயாகும்.

**முடிவுரை**

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைத் தொடுக்க விரிந்து கொண்டே இருக்கும். பகுத்து வழங்கல், நன்றி மறவாமை, புகழ்பட வாழ்தல், பயன் கருதாது கொடுத்தல், ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணமரபு, குடும்ப ஒற்றுமை என்று தமிழர்களின் சிறப்பினை இயம்பிக்கொண்டே இருக்கலாம். தமிழர்கள் ஈராயிரம் ஆண்டுகளாகப் பண்பாட்டைக் காப்பாற்றி வந்துள்ளனர். மேல்நாட்டு செல்வாக்கால் பண்பாடு சிறிய அளவு மாற்றமடைந்துள்ளது. நாம் விழிப்பாய் இருந்து சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தமிழின் சிறப்பையும், கலைகளின் சிறப்பையும், கலைகளின் சிறப்பையும் உணர்த்துதல் வேண்டும். நம் பண்பாட்டின் பழக்கவழக்கங்களைக் குடும்பங்களிலும் கைவிடாது வளர்த்துத் தமிழர்களின் அடையாளத்தைக் காத்தல் வேண்டும்.